*2021 ஆகஸ்ட் 27]* [திரு. துரைமுருகன்]

*அந்த* Authority*-யிடம் செல்கிறார்கள். அவர்களிடத்திலே தமிழ்நாட்டினுடைய முடிவை நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.* We reiterate the stand of Tamil Nadu. *காரணம்* Cauvery Water Management Authority has no jurisdiction to discuss this matter. It is sub-judice *என்பதை மிகத் தெளிவாக நாம் அதில் சொல்கிறோம்.*

*ஆனால், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. பொம்மை அவர்கள், இதே பெயர் கொண்ட அவருடைய தந்தையார், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், அவருக்கு மகனாக இவர், அவருடைய பெயரை வைத்திருக்கிறார். முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு திரு. பொம்மை அவர்கள், தலைவர் அவர்களிடத்திலே மிக நெருக்கமாக இருந்தவர்; அணுகும் முறையில் இருந்தவர். அதுமட்டுமல்லாமல், மத்திய அரசாங்கம், எந்த மாநில அரசாங்கத்தையும் நினைத்த நேரத்திலே கலைக்கலாம் என்ற எண்ணத்திற்கு, ஒரு வழக்குத் தொடுத்து முற்றுப்புள்ளி வைத்தவர் திரு. பொம்மை அவர்கள். எனவே, அப்படிப்பட்டவருக்கு மகனாகப் பிறந்தவர், நீதி தவறமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஒருக்கால், அரசியல் சூழ்நிலை காரணமாகக்கூட அவர் பேசியிருக்கலாம். எது எப்படியிருந்தாலும் தமிழ்நாட்டினுடைய கொள்கையான திட்டவட்டமாக மறுக்க வேண்டிய இடத்தில் மறுப்போம்; (மேசையைத் தட்டும் ஒலி) வாதாட வேண்டிய இடத்தில் வாதாடுவோம்; வெற்றிபெறுவோம். நன்றி, வணக்கம்.*

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

### முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் பழுதடைந்த வீடுகளைக் கட்டித் தருதல், அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், கல்விக் கட்டண சலுகை வழங்குதல், பணக்கொடை உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட பொதுத் துறை தொடர்பான மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால்,*

கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீரால்" என்று எழுதினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அத்தகைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழி நடக்கக்கூடிய இந்த அரசின் சார்பில், கடல் கடந்து வந்த இலங்கைத் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையில் சில அறிவிப்புகளை சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் இன்று வெளியிட நான் விரும்புகிறேன்.

இலங்கை நாட்டில் வாழும் தமிழ் மக்கள் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்திற்குப் பிறகு, கடல் கடந்து தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கினார்கள். அத்தகைய தமிழ் மக்களை அன்று முதல் இன்று வரையிலும் நாம் அரவணைத்துக் காப்பாற்றி வருகிறோம்; அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கி வருகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற தருணங்களில் எல்லாம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இலங்கைத் தமிழர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, கடந்த 1997–1998 ஆம் ஆண்டில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 ஆயிரத்து 594 புதிய வீடுகள், தலா 5 ஆயிரத்து 750 ரூபாய் செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டன. மேலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைப்பதற்கு 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

*முற்பகல் 10–25*

1998–1999 ஆம் ஆண்டில், தலா 7 ஆயிரத்து 700 ரூபாய் மதிப்பீட்டில், 3 ஆயிரத்து 826 வீடுகள், 2 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன. கடந்த 2–11–2009 அன்று, இலங்கை அகதிகள் முகாமில் உள்ள அடிப்படைத் தேவைகள் குறித்த ஓர் ஆய்வுக் கூட்டத்தை முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்தினார்கள். அதனடிப்படையில், அப்போது துணை முதலமைச்சராக இருந்த என்னையும், அமைச்சர்களையும் இலங்கை அகதிகள் முகாம்களுக்கு அனுப்பி ஆய்வு நடத்தி, அறிக்கை தர உத்தரவிட்டார்கள். அப்படி ஆய்வு செய்துவிட்டு, திரும்பி வந்து நாங்கள் அப்போது கொடுத்த அறிக்கையினை ஏற்று, இலங்கை அகதிகள் முகாம் வீடுகள் பழுதுபார்ப்பது, புதுப்பிப்பது, புதிய கைப்பம்புகள், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துவது உள்ளிட்ட இலங்கை அகதிகள் முகாம்களில் இருக்கும் தமிழர்களின்

வாழ்வாதாரத்திற்குத் தேவையான 14 அடிப்படைப் பணிகளை 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்த முதலமைச்சர்தான் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1983 ஆம் ஆண்டு முதல் இதுவரை 3 இலட்சத்து 4 ஆயிரத்து 269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். இவர்களில், 18 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சார்ந்த 58 ஆயிரத்து 822 பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் அமைந்துள்ள 108 முகாம்களில் (இரண்டு சிறப்பு முகாம்கள் உள்பட) தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், 13 ஆயிரத்து 540 குடும்பங்களைச் சார்ந்த 34 ஆயிரத்து 87 நபர்கள் காவல் நிலையங்களில் பதிவுசெய்து, வெளிப்பதிவில் வசித்து வருகிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக அகதிகளாக, முறையான அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்துவரக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கு, இனி பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்துத் தருவதை இந்த அரசு உறுதிசெய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக, அவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், பின்வரும் அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்:

இலங்கைத் தமிழர்களது முகாம்களில், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7 ஆயிரத்து 469 வீடுகள், 231 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டித்தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் முதற்கட்டமாக 3 ஆயிரத்து 510 புதிய வீடுகள் கட்டுவதற்கு, நடப்பு நிதி ஆண்டில் 108 கோடியே 81 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முகாம்களில் உள்ள மின் வசதி, கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதைத் தவிர, ஆண்டுதோறும், இதுபோன்ற வசதிகளைச் செய்து தர ஏதுவாக, இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த அடிப்படை வசதிகள் மட்டுமல்லாமல், அவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பட, வாழ்வு சிறக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்:

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 ஆகஸ்ட் 27

பொறியியல் படிப்பு பயிலுவதற்குத் தேர்ச்சிபெற்ற மாணவர்களில் மதிப்பெண் அடிப்படையில், முதல் 50 மாணவர்களுக்கு, அனைத்துக் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் ஆகியவற்றை அரசே ஏற்கும். மேலும், வேளாண்/ வேளாண் பொறியியல் பட்டப் படிப்பிலும் மதிப்பெண் அடிப்படையில் முதல் 5 மாணவர்களுக்கும், மேற்சொன்ன கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும். அதுமட்டுமின்றி, முதுநிலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து முகாம்வாழ் மாணவர்களையும் ஊக்குவிக்கும் வகையில், அவர்களின் கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக் கொள்ளும். இதற்காக ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முற்பகல் 10–30

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களில் ஆண்டொன்றுக்கு தோராயமாக, 750 மாணவர்கள் அரசு மற்றும் பிற கல்லூரிகளில் கலை, அறிவியல் மற்றும் பட்டயம் உள்ளிட்ட தொழிற்படிப்புகள் படித்து வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படக்கூடிய கல்வி உதவித்தொகை (Scholarship) போதுமானதாக இல்லை என அறியப்பட்டுள்ளது. இவர்களுக்குப் பாலிடெக்னிக் படிப்பிற்கு 2,500 ரூபாய், இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்பிற்கு 3,000 ரூபாய், இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு 5,000 ரூபாய் கல்வி உதவித்தொகையாக ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. இனி, இதை உயர்த்தி, பாலிடெக்னிக் படிப்பிற்கு 10 ஆயிரம் ரூபாய்; இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்பிற்கு 12 ஆயிரம் ரூபாய்; இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு 20 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக் கொள்ளவும், வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக ஐந்தாயிரம் முகாம் வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், குறு. சிறு தொழில்கள் செய்திட ஏதுவாகவும்,

முகாம்களில் உள்ள 300 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக, ஒவ்வொரு சுயஉதவிக் குழுவுக்கும் தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமின்றி, கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 321 சுயஉதவிக் குழுக்களுக்கு, ஏற்கெனவே வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபாயுடன், மேலும் 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக நடப்பு நிதி ஆண்டில் 6 கோடியே 16 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, மாதந்தோறும் அவர்களுடைய வாழ்வாதாரத்திற்காகப் பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையானது, குடும்பத் தலைவருக்கு ஆயிரம் ரூபாயும், இதர பெரியவர்களுக்கு 750 ரூபாயும், 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 400 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணக்கொடை, கடந்த பத்தாண்டு காலமாக உயர்த்தப்படாத நிலையில், இனி குடும்பத் தலைவருக்கு மாதந்தோறும் 1,500 ரூபாய், இதர பெரியவர்களுக்கு 1,000 ரூபாய் மற்றும் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 500 ரூபாய் என்று உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசிற்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 21 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவாகும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின்கீழ் இவர்களுக்கு எரிவாயு இணைப்பு பெற இயலாத நிலை உள்ளது. எனவே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கப்படும். இதற்காக அரசிற்கு ஒருமுறை 7 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். அதைத் தவிர, குடும்பத்திற்கு 5 எரிவாயு உருளைகளுக்குத் தலா 400 ரூபாய் வீதம் மானியத் தொகை வழங்கப்படும். இதற்காக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும். முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு தற்போது 20 கிலோவிற்கு மேல் வழங்கப்படும் அரிசிக்கு, கிலோ ஒன்றிற்கு 57 பைசா வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதனை இனி இரத்து செய்து, அவர்கள் பெறும் முழு அரிசி அளவும் விலையில்லாமல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான செலவுத் தொகையான 19 இலட்சம் ரூபாயையும் அரசே ஏற்றுக்கொள்ளும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 ஆகஸ்ட் 27

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ்மூலம் ஒவ்வோர் ஆண்டும் இலவச ஆடைகளும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இலவசப் போர்வைகளும் வழங்கக்கூடிய திட்டத்தில் ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையில் ஆடைகள் வாங்கி வழங்க இயலாத நிலையில், நடப்பு ஆண்டிற்கு பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு 1,790/– ரூபாயிலிருந்து, குடும்பம் ஒன்றுக்கு, 3,473/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக அரசிற்கு ஆண்டொன்றுக்கு 3 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள 250 ரூபாய் மதிப்பில் 8 வகையான சமையல் பாத்திரங்களை ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வழங்க இயலாத நிலையில், 1,296/– ரூபாய் மதிப்பில் சேலம் உருக்காலை இந்திய நிறுவனம்மூலம் உயர்த்தப்பட்ட வீதத்தில் பாத்திரங்கள் வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஒரு கோடியே 97 இலட்சம் ரூபாய் கூடுதலாக செலவினம் ஏற்படும்.

இதைத்தவிர, முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கும், வெளிப்பதிவில் உள்ள அகதிகளுக்கும் உரிய உதவிகளை வழங்கிடவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், குடியுரிமை வழங்குதல் மற்றும் அவர்களில் இலங்கை திரும்பும் அகதிகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்டகாலத் தீர்வுகளை கண்டறிய ஏதுவாகவும், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், பொதுத் துறை செயலாளர், மறுவாழ்வுத் துறை இயக்குநர் மற்றும் பிற அரசு உயர் அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுடைய பிரதிநிதி மற்றும் வெளிப்பதிவில் வசிக்கக்கூடிய அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஓர் ஆலோசனைக் குழு நிச்சயமாக விரைவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், தமிழ்நாட்டில் உள்ள முகாம்வாழ் இலங்கைத் தமிழர் நலனைப் பேணிட இந்த அரசு வீடு மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்துதலுக்கு 261 கோடியே 54 இலட்சம் ரூபாய், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை உறுதி செய்திட 12 கோடியே 25 இலட்சம் ரூபாய் மற்றும் அவர்களது வாழ்க்கைத்

*2021 ஆகஸ்ட் 27]* [திரு. மு.க. ஸ்டாலின்]

*தரத்தை மேம்படுத்திட 43 கோடியே 61 இலட்சம் ரூபாய், மொத்தம் 317 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திடும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–35*

*இங்குள்ள தமிழர்களை மட்டுமல்ல; கடல் கடந்து வாழக்கூடிய தமிழர்களையும் காக்கக்கூடிய அரசுதான் இந்த அரசு என்பதைக் கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## 3. பொதுத் துறை குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

**திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளின் துணையோடு, ஈழத்தில், உலகத்தால் தடை செய்யப்பட்ட பாஸ்பரஸ் குண்டுகளையும், ஏவுகணைகளையும் கொண்டு அழித்தொழிக்கப்பட்ட எமது மக்கள், எமது தொப்புள்கொடி உறவுகள், தாய் தமிழ்நாட்டுக்கு வருகை தந்து, இங்கு அமைதியாக வாழ வேண்டுமென்று வந்து, ** மோசமான குடிசைகளில் இங்கு தங்க வைக்கப்பட்டு, மிகப் பெரிய அவதிக்குள்ளான அந்த மக்களைக் காக்கின்ற வகையில், 2009 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், நான் கொண்டு வந்த ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் அடிப்படையில், அன்றையதினம் குழு அமைத்து, இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உட்பட அனைவரும் அந்த முகாம்களுக்குச் சென்று, ஆய்வு செய்து, அன்றைக்கு பல்வேறு உதவிகளைச் செய்தோம்.*

*அப்போது, ஈழ அகதி குழந்தைகள் உயர் கல்வி படிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. அதைச் சுட்டிக்காட்டியவுடனேயே அதை ஏற்றுக்கொண்டு, அவர்கள் பொறியியல் படிப்பு உட்பட உயர் கல்வி படிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை—*தொடர்ச்சி*

### முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் பழுதடைந்த வீடுகளைக் கட்டித் தருதல், அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், கல்விக் கட்டண சலுகை வழங்குதல், பணக்கொடை உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட பொதுத் துறை தொடர்பான மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் நான் வெளியிட்ட அறிவிப்புகளையொட்டி, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் நன்றி தெரிவித்து, வரவேற்று தங்களுடைய கருத்துகளைப் பதிவு செய்து, சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், சிறப்பு முகாம்களில் இருக்கக்கூடியவர்களுடைய நிலை, பரிதாபகரமான நிலையில் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். அதிலும் குறிப்பாக, திருச்சி சிறப்பு முகாம்களில் இருக்கக்கூடிய செய்தியை இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்.*

*திருச்சி சிறப்பு முகாமில் 80 இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட 115 வெளிநாட்டினர், நீதிமன்றங்கள் மற்றும் வெளிநாட்டினர் சட்டம், 1946–ன்படி இருக்கக்கூடிய வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள்மீதுள்ள 47 வழக்குகளில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு, நீதிமன்றங்களில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோல், 44 வழக்குகளில் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.*

*இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில், 63 வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றுள், 38 வழக்குகளில் புலன் விசாரணை முடிந்து, நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது; 25 வழக்குகள் நிலுவையில் உள்ளன. சிறப்பு*

முகாமில் தங்க வைக்கப்பட்டிருக்கக்கூடியவர்களுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. உணவுப் படியாக நாளொன்றுக்கு ரூபாய் 175 வழங்கப்படுகிறது. மேலும், முகாமில் தொலைக்காட்சி, வானொலிப் பெட்டி உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. இவர்களை அவர்களுடைய உறவினர்கள் அனைத்து வேலை நாட்களிலும் சந்திக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டவர்கள்மீதும் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விரைந்து முடிக்க காவல் துறையினருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கையின் விளைவாக, 15–7–2021 அன்று அருண்ராஜ், முருகையா உள்ளிட்ட 10 இலங்கைத் தமிழர்கள், அவர்களது நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்மீது நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். நீதிமன்றங்களின் தீர்ப்பின் அடிப்படையில், ஒன்றிய அரசுக்கு உரிய தகவல் தெரிவித்து, இலங்கைத் தமிழர்கள் தங்களது நாட்டிற்குத் திரும்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

*** மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயைப் போல் எங்களிடத்தில் அன்பு காட்டி, அரவணைத்து. . .*